DINAMALAR

18 JUNE 2022

PAGE 4

# கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை புதுச்சேரி பல்கலை எச்சரிக்கை

**புதுச்சேரி, ஜூன் 18–**

'கல்லூரிகளில் சேரும் முன், பல்கலைக்கழக இணைப்பு பெற்றுள்ளதா என்பதை மாணவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, புதுச்சேரி பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்(மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருக்கனூரில் உள்ள உஷா லட்சுமணன் கல்வியியல் கல்லூரிக்கு, கல்வியியல் கல்லூரியை நடத்த தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் காரணத்தால் 2019–20, 2020–21, 2021–22 ஆகிய கல்வியாண்டிற்கான இணைப்பு வழங்கப்படவில்லை. மேலும், தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம், சில விஷயங்களில் இணங்காததற்காக கல்லூரிக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம் ஆகியவற்றுக்கு எதிராக கல்லூரி 2019, 2021 ஆண்டுகளில் தாக்கல் செய்த ரிட் மனுவை, சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் கடந்தாண்டு செப்டம்பர் 7ம் தேதி தேதியிட்ட தனது ஆணையில், என்.சி.டி.இ., மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆகிய இரண்டாலும் மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராகச் சுட்டிக் காட்டப்பட்ட உண்மை நிலை, சூழ்நிலைகள் மற்றும் கடுமையான குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு, என்.சி.டி.இ., மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகம் எடுத்த முடிவில் தலையிட இந்த நீதிமன்றத்திற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

மேலும், இந்த நிறுவனம் செயல்பட அனுமதிக்க முடியாது, ஆசிரியர்களின் எதிர்காலத்தை நிச்சயமற்றதாக மாற்றும், ரிட் மனுக்கள் இரண்டிலும் எந்த தகுதியும் இல்லை. ஒவ்வொரு முறையும் இந்த நீதிமன்றத்திலிருந்து சில இடைக்கால உத்தரவைப் பெற்று, நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதுதான் மனுதாரர் நிறுவனத்தின் முயற்சியாகத் தெரிகிறது. அத்தகைய நடைமுறைக்கு இந்த நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்கிறது என்று வெளியிட்டுள்ளது.

எனவே, மேற்படி கல்லூரியில் பல்கலைக்கழகத்தின் இணைப்பு இல்லை என்பதால் மாணவர்கள் சேர்க்கை பெற வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலும் சேருவதற்கு முன் அனைத்து மாணவர்களும் உள்கட்டமைப்பு வசதிகள், தேவையான பணியாளர்கள், மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இணைப்பு ஆணைகளை சரி பார்க்க அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

18 JUNE 2022

PAGE 4

# கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை புதுச்சேரி பல்கலை எச்சரிக்கை

**புதுச்சேரி, ஜூன் 18–**

'கல்லூரிகளில் சேரும் முன், பல்கலைக்கழக இணைப்பு பெற்றுள்ளதா என்பதை மாணவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, புதுச்சேரி பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்(மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருக்கனூரில் உள்ள உஷா லட்சுமணன் கல்வியியல் கல்லூரிக்கு, கல்வியியல் கல்லூரியை நடத்த தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் காரணத்தால் 2019–20, 2020–21, 2021–22 ஆகிய கல்வியாண்டிற்கான இணைப்பு வழங்கப்படவில்லை. மேலும், தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம், சில விஷயங்களில் இணங்காததற்காக கல்லூரிக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம் ஆகியவற்றுக்கு எதிராக கல்லூரி 2019, 2021 ஆண்டுகளில் தாக்கல் செய்த ரிட் மனுவை, சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் கடந்தாண்டு செப்டம்பர் 7ம் தேதி தேதியிட்ட தனது ஆணையில், என்.சி.டி.இ., மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆகிய இரண்டாலும் மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராகச் சுட்டிக் காட்டப்பட்ட உண்மை நிலை, சூழ்நிலைகள் மற்றும் கடுமையான குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு, என்.சி.டி.இ., மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகம் எடுத்த முடிவில் தலையிட இந்த நீதிமன்றத்திற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

மேலும், இந்த நிறுவனம் செயல்பட அனுமதிக்க முடியாது, ஆசிரியர்களின் எதிர்காலத்தை நிச்சயமற்றதாக மாற்றும், ரிட் மனுக்கள் இரண்டிலும் எந்த தகுதியும் இல்லை. ஒவ்வொரு முறையும் இந்த நீதிமன்றத்திலிருந்து சில இடைக்கால உத்தரவைப் பெற்று, நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதுதான் மனுதாரர் நிறுவனத்தின் முயற்சியாகத் தெரிகிறது. அத்தகைய நடைமுறைக்கு இந்த நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்கிறது என்று வெளியிட்டுள்ளது.

எனவே, மேற்படி கல்லூரியில் பல்கலைக்கழகத்தின் இணைப்பு இல்லை என்பதால் மாணவர்கள் சேர்க்கை பெற வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலும் சேருவதற்கு முன் அனைத்து மாணவர்களும் உள்கட்டமைப்பு வசதிகள், தேவையான பணியாளர்கள், மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இணைப்பு ஆணைகளை சரி பார்க்க அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.